**வாசிக்க**: **எசேக்கியல்** 18:1-20

**பிதாக்களின் அக்கிரமம் பிள்ளைகளிடம் கேட்கபடுவதில்லை**.

கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்: பிதாக்கள் திராட்சக்காய்களைத் தின்றார்கள், பிள்ளைகளின் பற்கள் கூசிப்போயின என்னும் பழமொழியை நீங்கள் இஸ்ரவேல் தேசத்தைக்குறித்தச் சொல்லுகிறது என்ன? இதோ, எல்லா ஆத்துமாக்களும் என்னுடையவைகள், தகப்பனின் ஆத்துமா எப்படியோ, அப்படியே மகனின் ஆத்துமாவும் என்னுடையது, பாவஞ் செய்கிற ஆத்துமாவே சாகும்.

ஒருவன் நீதிமானாயிருந்து, நியாயத்தையும் நீதியையும் செய்து,

என் கட்டளைகளின்படி நடந்து, என் நியாயங்களைக் கைக்கொண்டு, உண்மையாயிருப்பானாகில் அவனே நீதிமான், அவன் பிழைக்கவே பிழைப்பான் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். ஆனாலும் அவனுக்கு ஒரு குமாரன் பிறந்து, அவன் மேற்சொல்லிய கடமைகளின்படி நடவாமல், தேவனுடைய அன்பையும், நீதியையும் கட்டளைகளையும் புறக்கணித்தால் அவன் பிழைப்பானோ? அவன் பிழைப்பதில்லை, எச்சரிப்பை அவமதித்ததாலே, அவன் சாகவே சாவான், அவன் இரத்தப்பழி அவன்மேல் இருக்கும்.

**கேள்வி**:

பிதாக்கள் செய்த பாவத்தின் விளைவினால் வரும் சாபத்தை பிள்ளைகள் அனுபவிக்கிறார்களே..! அது எப்படி?

**பதில்**:

ஆதாமின் பாவம் சாபத்தையும் மரணத்தையும் முழு மனுக்குலத்தை மூடியது உண்மையென்றாலும், கர்த்தராகிய தேவன் தாம் ஏற்படுத்திய இரட்சிப்பை குறித்து தீர்க்கதரிசியின் மூலம் தெளிவாக நம்மோடு இடைபடுகிறார். ஒவ்வொரு மனிதனும் இந்த சாபம் மரணத்திலிருந்து விடுபெற்று, நீதிமானாக மாற தேவன் வைத்துள்ள திட்டத்தை தனிமனிதன் ஏற்று கொண்டால் அவனை அவனுடைய தகப்பன் செய்த பாவங்கள் சாபங்கள் ஒன்றும் செய்யமுடியாது. அவனை நீதிமானாக மாற்ற கூடிய ஒரே வழி, நமக்காக மரித்த, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்று கொள்வதேயாகும். இந்த அன்பை எவனொருவன் புறக்கணிக்கிறானோ அவன் தான் மரணத்தை தழுவுகிறான். ஒவ்வொரு தனிமனிதனுக்கும் இந்த இரட்சிப்பின் வாய்ப்பு அளிக்கப்படுவதையே தேவன் விவரித்து சொல்கிறார். தேவபிள்ளையே இதை நீயும் நானும் உணர்வது மட்டுமல்லாமல் நம் நண்பர்கள் உறவினர் எல்லாருக்கும் கூறி அவர்களை மரணத்திற்கு தப்புவிக்கும் பாத்திரங்களாக மாறலாமா..!

துன்மார்க்கன் சாகிறது எனக்கு எவ்வளவேனும் பிரியமோ? அவன் தன் வழிகளை விட்டுத் திரும்பிப் பிழைப்பது அல்லவோ எனக்குப் பிரியம் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். எசேக்கியேல் 18 :23

**ஜெபம்**

நீதியுள்ள ராஜாவே உமக்கு ஸ்தோத்திரம். நாங்கள் நீதிமானாய் வாழும் கிருபைக்கு ஸ்தோத்திரம். நாங்கள் பரிசுத்தமாய் வாழுவது போல் எங்கள் உறவுகளும் பரிசுத்தமாய் வாழ்வதாக. ஆமென்